அனைவருக்கும் சத்தான உணவு !

வளமான தமிழ்நாடு !

நம் முதல்வர் தலைமையில்

முதன்மை மாநிலம் !


முன்னேறிக் கொண்டே இருப்போம் !


கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

## மானியக் கோரிக்கை

## எண். 13





## அறிவிப்புகள் 2023 - 2024

**அர. சக்கரபாணி**

உணவு மற்றும் உணவுப்பொருள்

வழங்கல் துறை அமைச்சர்

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு

மானியக் கோரிக்கை எண் : 13

## அறிவிப்புகள்
## 2023 - 2024

**அர. சக்கரபாணி**
உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

## உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் 13 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

**அர. சக்கரபாணி**
உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்

**1. திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கிடங்கு வளாகத்தில் உள்ள காலி இடத்தில் கூடுதலாக 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்புக் கிடங்கு 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் கிடங்கு வளாகத்தில் 7400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 4 கிடங்குகள் கடந்த 5 ஆண்டுகளாக 100% கொள்ளளவுடன் முழுப் பயன்பாட்டில் உள்ளன. சந்தையின் தேவை மற்றும் சேமிப்புக்கான இடவசதி தேவையைக் கருத்தில் கொண்டு பல்லடம் சேமிப்புக் கிடங்கு வளாகத்தில் காலியாக உள்ள இடத்தில் கூடுதலாக 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட புதிய சேமிப்புக் கிடங்கு 2 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தால் கட்டப்படும்.

**2. அரியலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திற்குச் சொந்தமான இடத்தில் தலா 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்புக் கிடங்குகள் மொத்தம் 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

அரியலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்டங்களில் பல்வேறு சரக்கு வைப்பாளர்களான தனியார் நூற்பாலைகள், தானிய விற்பனையாளர்கள், ஆவின், சிமெண்ட் நிறுவனங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் தொடர்ந்து கிடங்கு வசதி தேவை என வலியுறுத்தி வருவதன் காரணமாக அரியலூர் மாவட்டம், தேலூர் கிராமத்திலும், திருப்பத்தூர் மாவட்டம், குனிச்சி கிராமத்திலும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் சொந்த இடங்களில் தலா 3400 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன சேமிப்புக் கிடங்குகள் மொத்தம் 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.



**3. 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியின் கீழ் அமைக்கப்படும்.**

விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 100 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் 33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்ட நிதியின் கீழ் தேவைப்படும் இடங்களில் அமைக்கப்படும்.

4. பொது விநியோகத் திட்டச் செயல்பாட்டினை வட்ட அளவில் துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக 3 மாவட்டங்களில் மொத்தம் 8,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள், கிடங்கு அலுவலகங்கள், சுமை தூக்குவோர் ஓய்வறைகள், சுற்றுச்சுவர் / பாதுகாப்பு வேலி மற்றும் சாலை வசதிகளுடன் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

பொது விநியோகத் திட்ட உணவுப்பொருள்கள் சேமிப்பதற்கான கிடங்குகளின் தேவையினைக் கருத்தில் கொண்டு காஞ்சிபுரம் மாவட்டம் – வாலாஜாபாத் வட்டத்திலும் மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி வட்டத்திலும் தலா 3000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட வட்ட செயல்முறைக் கிடங்குகள் தலா 5 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், நீலகிரி மாவட்டம் பந்தலூர் வட்டத்தில் 2500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட வட்ட செயல்முறைக் கிடங்கு



4 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் மொத்தம் 8,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 3 புதிய வட்ட செயல்முறைக் கிடங்குகள், கிடங்கு அலுவலகங்கள், சுமை தூக்குவோர் ஓய்வறைகள், சுற்றுச்சுவர் / பாதுகாப்பு வேலி மற்றும் சாலை வசதிகளுடன் 15 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படும்.

6. டெல்டா மாவட்டங்களில் 65,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும்.

தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லினை மழை மற்றும் புயல் காலங்களில் மிகவும் பாதுகாப்பான முறையில் சேமித்துப் பாதுகாத்திட 65,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நபார்டு நிதியுதவியுடன் அமைக்கப்படும்.



7. செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் 52,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மேற்கூரை அமைப்புடன் கூடிய நெல் சேமிப்புக் கிடங்குகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் அதிகளவில் செய்யப்பட்டு வருவதால் அதனைப் பாதுகாப்பாக சேமிக்கும் பொருட்டு செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில் மொத்தம் 52,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்புக் கிடங்குகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. சென்னையில் கோபாலபுரம் மற்றும் அண்ணா நகரில் இயங்கி வரும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் இரண்டு அமுதம் பல்பொருள் அங்காடிகள் பொதுமக்களின் வசதிக்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மேம்படுத்தப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் அமுதம் பல்பொருள் அங்காடிகளைத் தரம் உயர்த்தும் வகையில் சென்னையில் கோபாலபுரம் மற்றும் அண்ணா நகர் ஆகிய இடங்களில் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் 2 அமுதம் பல்பொருள் அங்காடிகள் பொதுமக்களின் வசதிக்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் மேம்படுத்தப்படும்.



9. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மதுரை மண்டல அலுவலகத்தின் பழைய கட்டடத்தை அகற்றி அந்த இடத்தில் மண்டல அலுவலகம், அமுதம் நியாயவிலைக் கடை மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடி ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய அடுக்குமாடிக் கட்டடம் 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மதுரை மண்டல அலுவலகக் கட்டடம் பாதிப்படைந்து உள்ள நிலையைக் கருத்தில் கொண்டு அதை அகற்றி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் புதிய மண்டல அலுவலகம், அமுதம் நியாயவிலைக்கடை மற்றும் அமுதம் பல்பொருள் அங்காடி ஆகியவற்றை உள்ளடக்கிய புதிய அடுக்குமாடிக் கட்டடம் 11 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

10. 2023 ஆம் ஆண்டு ஐ.நா. சபையால் சர்வதேச சிறுதானிய ஆண்டாகக் கடைபிடிக்கப்படுவதனை முன்னிட்டு பாரம்பரிய சிறுதானிய உணவு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் சிறுதானிய உணவுத் திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

2023 ஆம் ஆண்டினை சர்வதேச சிறுதானிய ஆண்டாக ஐ.நா சபையால் கடைப்பிடிக்கப்படுவதனை முன்னிட்டு நுகர்வோர் சத்தான உணவினை உட்கொண்டு ஆரோக்கியத்தைப் பராமரிப்பதில் சிறுதானியங்களின் பயன்பாடு குறித்து போதிய விழிப்புணர்வு வழங்குவது அவசியமாகிறது. இது தொடர்பாக கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் உள்ளிட்ட சிறுதானிய பயன்பாட்டின் விழிப்புணர்வினை ஏற்படுத்த அனைத்து மாவட்டங்களிலும் சிறுதானிய உணவு திருவிழா போன்ற நிகழ்ச்சிகள் 40 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.



11. நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் பொது விநியோகத் திட்ட இன்றியமையாப் பண்டங்களின் இயக்கம் மற்றும் விநியோகம் துரிதக் குறியீடு (QR code) உதவியுடன் கண்காணிக்கும் முறை முதற்கட்டமாக 62 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவினத்தில் செயல்படுத்தப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் குந்தா வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளுக்குத் தற்சமயம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கிலிருந்து அனுப்பப்படும் அரிசி, கோதுமை மற்றும் துவரம்பருப்பு ஆகிய இன்றியமையாப் பண்டங்களின் மூட்டைகளில் பண்டங்களின் அளவு, நாள், நேரம் உள்ளிட்ட விவரங்கள் கொண்ட துரிதக் குறியீட்டினை (QR code) தைத்து அனுப்பி, அதன் வாயிலாக கிடங்கிலிருந்து இன்றியமையாப் பண்டங்கள் நியாய விலைக்கடைகளுக்கு முறையாக நகர்வு செய்யப்படுவதையும், அந்த மாதத்திலேயே

பண்டங்கள் உரிய தரத்துடன் விநியோகம் மேற்கொள்ளப்படுவதும் மாவட்ட நிர்வாகம் வாயிலாக கண்காணிக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கான மேம்பட்ட சேவை நியாய விலைக்கடைகள் மூலம் வழங்கப்படுவது உறுதி செய்யப்பட்டு வருகின்றது. இதனை நீலகிரி மாவட்டத்தின் அனைத்து வட்டங்களில் செயல்படும் பொது விநியோகத்திட்ட கிடங்குகளில் ஆண்டிற்கு 62 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவினத்தில் விரிவுப்படுத்தி செயல்படுத்தப்படும்.



**12. தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 மற்றும் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள், 2017 தொடர்பாக பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தும் அரசுத்துறை அலுவலர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சி 71 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

தமிழ்நாட்டில் நவம்பர் 2016 முதல் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 செயல்பாட்டில் உள்ளது. இத்திட்டத்தின் கூறுகளைச் செயல்படுத்த தமிழ்நாடு உணவுப் பாதுகாப்பு விதிகள், 2017 அமலில் உள்ளன. மேற்படி சட்டம் மற்றும் விதிகளின்படி முன்னுரிமை குடும்பமாக நிர்ணயம் செய்யப்பட்ட எந்த ஒரு குடும்பத்திற்கும் அவர்களுக்கான உணவுப் பாதுகாப்பு முறையாக உறுதி செய்யப்பட்டு அவர்தம் குடும்பத்திற்கான உரிம அளவின்படி உணவு தானியங்கள் விநியோகம் செய்யப்பட வேண்டும். தமிழ்நாட்டில் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்

பாதுகாப்புத் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுத் துறை ஆகியவற்றின் வாயிலாகப் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் நிலையில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013 மற்றும் தொடர்புடைய விதிகள், கட்டுபாட்டு ஆணைகள் குறித்து உரிய அலுவலர்களுக்கு பயிற்சி வழங்குவது அவசியமாகிறது. ஆதலால், பொது விநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்தும் மேற்கண்ட மூன்று துறைகளைச் சார்ந்த 3,049 அலுவலர்களுக்கும் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் 71 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும்.



**13. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலானாய்வுத் துறையில் வெளி முகமை மூலம் பணியமர்த்தப்படும் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாத ஊதிய நிர்ணயத்தினை 6000/– ரூபாயிலிருந்து 15,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

தற்போது குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலானாய்வுத் துறையில் துப்புரவுப் பணியாளர்கள் வெளி முகமை மூலமாகப் பணியமர்த்தப்பட்டு வருகின்றனர். இவ்வாறு பணியமர்த்தப்படும் துப்புரவுப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மாதம் 6000/– ரூபாய் அரசால் தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.

இத்தொகை மிகவும் குறைவாக இருப்பதால், குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலானாய்வுத் துறையில் தற்போது உள்ள 38 அலகுகள், 12 சரகங்கள் மற்றும் 3 மண்டலங்கள் என மொத்தம் 53 அலுவலகங்களில் உள்ள

53 துப்புரவுப் பணியாளர்களுக்கு மாத ஊதியம் 15,000/- ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். இதற்கான தொடர் செலவினம் ஆண்டிற்கு 95 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஆகும்.

**அர. சக்கரபாணி**
உணவு மற்றும் உணவுப்பொருள்
வழங்கல் துறை அமைச்சர்